செ.வெ.எண்: 253 நாள்:17.04.2018

# திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் நகராட்சி மற்றும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் மூலம் ரூ.13.86 கோடி மதிப்பீட்டில் 462 பயனாளிகளுக்கு வீடு கட்டும் பணிகள் தொடங்குவதற்கான உத்தரவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

------

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் நகராட்சியில் தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தில் பயனாளிகளுக்கு வீடுகள் கட்டும் பணிகள் தொடக்க உத்தரவு வழங்கும் விழா அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.முருகையாபாண்டியன் அவர்கள் தலைமையில் இன்று (17.04.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு 462 பயனாளிகளுக்கு ரூ.13.86 கோடி மதிப்பில் வீடுகள் கட்டும் பணிகள் தொடங்குவதற்கான உத்தரவினை வழங்கினார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது தமிழ்நாடு தொலை நோக்கு திட்டம் 2023 ன் படி குடிசை மற்றும் ஓட்டு வீடுகளில் வாழும் ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தில் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் நிரந்தர கான்கீரிட் வீடுகள் கட்டி தரும் திட்டத்தினை அறிவித்தார்கள். கிராம ஊராட்சி பகுதியில் பசுமை வீடுகள் திட்டம், இந்திரா காந்தி நினைவு குடியிருப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களில் வீடுகள் கட்டிதரப்படுகிறது. நகராட்சி பகுதிகளில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டிதரப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இன்று அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் 191 பயனாளிகளுக்கு ரூ.5.73 கோடி மதிப்பீட்டிலும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் 271 வீடுகள் ரூ.8.13 கோடி மதிப்பீட்டிலும் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் தொடங்குவதற்கான உத்தரவு இன்று வழங்கப்படுகிறது. புதிய கான்கீரிட் வீடுகள் கட்ட மத்திய அரசு மானியம் ரூ.1.50 லட்சமும் மாநில அரசின் மானியம் ரூ.60 ஆயிரம் என மொத்தம் ரூ.2.10 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. ஏற்கனவே அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் 1455 வீடுகள் ரூ.43.65 கோடி மதிப்பீட்டிலும், விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் 1395 வீடுகள் ரூ.41.85 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் அம்பாசமுத்திரம் நகராட்சிக்கு உட்பட்ட வாகைகுளம் கிராமத்தில் 240 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.21.45 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 11,782 வீடுகள் ரூ.353.46 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அம்பாசமுத்திரம் பகுதியில் மட்டும் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் சுமார் ரூ.100 கோடி மதிப்பீட்டிலான குடியிருப்புகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் இப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும். மேலும் மணிமுத்தாறு முதல் மாஞ்சோலை வரையிலான தார்ச்சாலை புதுப்பிக்கும் பணிகளும் விரைவில் நடைபெறவுள்ளது. இப்பகுதி மக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களும் விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பேசினார்.

முன்னதாக அம்பாசமுத்திரம் வேலாயுதநகர் பகுதியில் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.8 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய நியாயவிலை கடை கட்டிடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சக்திவேல்முருகன், செவல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவர் திரு.முத்துசாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.குருமூர்த்தி, குடிசைமாற்று வாரிய செயற்பொறியாளர்.திரு.ஜெய செல்வன், உதவி பொறியாளர்கள் திரு.மாடசாமி, திரு.என்.எம். மஜீத்,கூட்டுறவு சார் பதிவாளர் திரு.கோமதிநாயகம், அம்பாசமுத்திரம் மீனி சூப்பர்மார்க்கெட் தலைவர் திரு.சங்கரலிங்கம், அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையர் திரு.முருகேசன் முக்கிய பிரமுகர்கள் திரு.செல்வராஜ், திரு.அறிவழகன், திரு.கண்ணன், திரு.மதனகிருஷ்ணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

************

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.